# குசேலன்

## வறுமையிற் செம்மை

வறுமை என்பது இன்மை. அது பெரும்பாலும் பொருள் இல்லாமை ஒன்றையே குறிக்கின்றது. உலகத்தில் அனுபவிக்கும் இன்பங்களுக் கெல்லாம் பொருளே காரணமாகும். அந்தப் பொருள் இல்லையானால் இன்பமில்லை. இன்பம் இல்லாதபோது துன்பம் தொடருமன்றோ? அதனால், வறுமை என்பதற்குத் துன்பமென்றே பொருள் கூறலாம்.

வறுமை எப்படிப்பட்ட தீரனையும் கலங்கச் செய்யும்; நல்லொழுக்கம் உடையவனையும் புல்லொழுக்கம் உடையவனாக்கும். இது கொண்டே, "கொடிது கொடிது வறுமை கொடிது" என ஔவையாரும் அருளினர். எந்தத் தொழிலிலும் இழிவான இரக்குந் தொழிலும் வறுமையின் காரியமே யன்றோ?

வறுமை, சிறந்த முயற்சி யுடையவனையும் சோம்பலில் புகுத்தும்; மனப்பால் குடிக்கச் செய்யும்; அவனுக்கு அவமானத்தையும் வருவிக்கும்; நல்லோரைக் கண்டால் நாணும்படி செய்யும்; அவன் வாயிற் பிறக்கும் நல்ல சொல்லையும் செல்லவொட்டாது.

இது நிற்க, உலகத்தில் நன்மையே தருவதென்றும், தீமையே தருவதென்றும் தனித்தனிப் பொருள் இல்லை. ஒவ்வொரு பொருளிலும் நன்மை தீமைகள் விரவியே இருக்கும். "அளவுக்கு மிஞ்சினால்

அமிர்தமும் விஷம்" என்னும் உண்மை யுரை இதனை உறுதிப்படுத்தும். களவு என்று கேட்ட மாத்திரத்தானே, கொடியதென்று அதனைக் கடியவொண்ணாது. களவில் நன்மை தருங் களவும் உண்டு. ஒருத்தி உற்றாரோடு கலகப்பட்டு, ஒருவருங் காணாதபோது சாவ நினைத்து, நஞ்சு கூட்டிவைத்தாள். அது கண்ட நன் மனம் உடையான் ஒருவன், அதனைக் களவுசெய்து கொண்டுபோய்க் கொட்டிவிட்டான். இது செய்கை யளவில் களவேயாயினும், பயனளவில் நன்மையாக முடிந்தது. ஆகையால், அக் களவு குற்றத்தில் சேராது.

அதுபோலவே நன்மைதரும் வறுமையும் உண்டு. தமக்கு நேர்ந்த தீமையையும் நன்மையாகக்கொண்டு அதனை அனுபவிக்கும் தன்மையால் பெரியோருக்கு நல்லோர் என்னும் பெயர் வழங்குகின்றது. அப் பெரியோர் நன்மை வந்த காலத்தில் களிப்படைவதும், தீமை வந்த காலத்தில் துக்கப்படுவதும் இல்லை.

தெய்வத் தன்மை வாய்ந்த கவிஞர்கள் எல்லாம் வறுமையால் வாடினவர்களே. அவர்கள் அவ் வறுமை காரணமாகச் செய்துவைத்த நூல்கள் அல்லவா இப்போது நாம் பொன்னேபோல் போற்றிப் படிப்பவை. அக் கவிஞர் செல்வத்திற் சிறந்த சீமான்களாகவிளங்கியிருந்தால், அவர்கள் உளத்திற்கொண்ட எண்ணங்கள் எல்லாம் வெளிப்பட்டிருக்குமா — மண்ணிற் புதையுண்ட செல்வம்போல மறைந்தே போயிருக்குமன்றோ. இதனால், நல்லோரிடத்துத் தோன்றும் தீமையும் நன்மைக்கே காரணமாகும் என்பது தெளிவாகின்றது.

இனி, தமக்கு நேர்ந்த வறுமையைப் பெருமையாகக்கொண்டு, அவ் வறுமைக்கே வறுமை யுண்டாக்கிய மாதவ முனிவர் ஒருவரது சரித்திரம் கூறுவோம்.

# குசேலன்

நிலமகள் முகமோ திலகமோ கண்ணே
நிறை நெடு மங்கல நாணே
இலகு நன் மார்பில் ஆரமோ உயிரின்
இருக்கையோ மலர் மகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பின் நன் மணிகள்
வைத்த பொற் பெட்டியோ வானோர்
உலகின்மேல் உலகோ ஊழியின் இறுதி
உறையுளோ யாதென உரைப்பாம்

என, எத் திசையோரும் வியந்து கூறுஞ் சிறப்பினை யுடையது வடமதுரை யென்னுந் திருப்பதி. இது, காசி, காஞ்சி, துவாரகை, அவந்தி, அயோத்தி, மதுரை, மாயை என்னும் முக்தி நகரங்கள் ஏழில் ஒன்றாம். இந்த நகரம் இப்பொழுதைக்கும் மட்ரா என்னும் அங்கிலப் பெயரினால் வழங்குகின்றது.

அந்த நகரம் மற்றைய நகரங்களைவிடச் சிறந்து விளங்கியதேபோல், அந்த நகர வாசிகளும் மற்றைய நகர வாசிகளைவிடத் தூய்மையராய் விளங்கினர். அவர்கள் தம் வாணாளை வீணாளாக்காமல், நன்னெறியைக் கடைப்பிடித்து ஒழுகினர்.

அந்த நகருக்கு அருகில் அழகிய அரணியம் ஒன்றுண்டு. அங்கு, மா, பலா முதலிய பழமரங்கள் தளிர்த்துத் தழைத்து, பூத்துக் காய்த்துக் கனிந்து, சூரிய கிரணங்கள் பூமியிற் பரவாவண்ணம் செறிந்து விளங்கின. அந்தச் சூழலில், பாவமாகிய கடலைக் கடந்து, முக்தியாகிய கரையில் சேர விரும்புவோர்

தவமாகிய கப்பலை, திகைப்பின்றி நடத்துவதற்கு ஓங்கி நின்ற கலங்கரை விளக்கமே (Light-house) போல் நெடுங் குன்ற மொன்று நிலைத்திருந்தது. அதன் சாரலில், யான் எனது என்னும் அகப்பற்றுப் புறப் பற்றுக்களை அறவே யொழித்த அருந்தவத்து அந்தணர் சிலர் பர்ணசாலைகள் அமைத்துக்கொண்டு தம் மனைவியரோடு வசித்திருந்தனர்.

அம் முனிவர்களுள் சுதாமா என்பவர் ஒருவர். அப் புனிதர், அரிய விரதங்கள் பல அநுஷ்டித்து எலும்புகள் அனைத்தையும் எண்ணிடக் கூடியவாறு மிகவும் இளைத்த யாக்கையினை யுடையவர். அப் பெரியோர், கிழிந்த வஸ்திரத்தை உடுத்துக்கொண்டிருந்த காரணத்தினால் அவரைக் கண்டவர் அனைவரும் 'குசேலன்' எனக் கூறத் தலைப்பட்டனர். அதனால், அவருக்குக் குசேலர் என்பதே காரண இடுகுறிப் பெயராய் வழங்கலாயிற்று.

தவத் துறையில் படிந்து, இன்பக் கடலில் மூழ்கி வருங் குசேலமுனிவர், தமது தவத்திற்கு வேண்டிய குற்றேவல்களை மனவாட்டமின்றிச் செய்ய வல்லவர் ஒருவர் வேண்டுமென விரும்பினர். அவ்வாறு செய்ய வல்லவள் மனைவியே யாவள், மற்றையர் ஆகார், எனத் தேர்ந்து, 'அன்னை தயையும், அடியாள் பணியும், பொன்னின் அழகும், புவிப் பொறையும்' முதலிய நற்குணங்கள் ஒருங்கே விளங்கிய சுசீலை என்னும் பெண்மணியை நாடி மணந்தனர். அம் மாதரசி,

மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந்து உவப்ப ஊட்டும்
நேசம்மிக்குடையாள் கொண்கன் நினைப்பறிந் தொழுகும்நீராள்
தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திடல் என்றும் இல்லாள்
பேசுதிண் கற்புவாய்த்தாள் பெற்றதே கொண்டு உவப்பாள்.

இத் தன்மை வாய்ந்த அப் பெண்மணி,

கொழுநன் உண்டபின் தான் உணுங் கொள்கையும்
விழி துயின்றபின் துஞ்சலும் மென் துயில்
எழுதல் முன்னம் எழுதலு மேயன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே.

அன்பர் துஞ்சிடில் துஞ்சுதல் ஆங்கவர்
துன்பம் எய்திடில் தாமும் அத் துன்புறல்
இன்பம் உற்றிடில் இன்புற் றிருத்தலே
மன்பெ ருந்தவம் கற்புடை மாதர்க்கே.

கொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வான்தவம் ஆற்றுதல்
தொழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே.

எய்தும் இல்துறந் து ஏகலர் இல்லகல்
தையலார் முகம் காணினுஞ் சாம்புவர்
மையில் காதலர் வந்தெவை யாயினும்
செய்திர் என்றலும் செய்தன மென்பரால்.

இனிய கேள்வர் முனியின் எதிர்நின் று
துனிகொள் நெஞ்சொ டெதிர்மொழி சொல்கிலார்
அனைய கேள்வர் எறியினும் அன்பொடும்
கனிவர் நெஞ்சகம் கற்புடை மாதரே.

என்னும் இவை முதலிய கற்பிலக்கணங்களைச் சற்றும் குறையாமற்கொண்டு, இல்லறம் நடத்திவரும் நாட்களில், ஒருநாள் குசேலர் தம் மனைவியை நோக்கி, "பெண்ணே, சுசீலா! புத்திரப்பேறு அடையாதவர் முக்தி அடையார் என்பது வேதப்பிரமாணம். இல்லறத்தை அடைந்தவர்களுக்குப் புத்திரப்பேறே சிறந்த ஆபரணமாகும். இதனை நோக்கியே,

கண் இல் யாக்கையும் திங்கள் இல் கங்குலும் கண்போல்
அண்ணல் மந்திரி இல் அரசாட்சியும் அருளில்
திண்ணென் நெஞ்சமும் புலவர் இல் அவையும் ஒண்தீம்பால்
வண்ண வாய் இள மக்கள் இல் வாழ்வும் ஒப்பாமால்

எனப் பெரியோர் கூறுவர். ஆதலால், புத்திரப்பேறு அடைதல் அவசியமாகும்" என்றனர். பின்பு, அவர் தம் மனையாளோடு வசித்திருந்து, புத்திரப்பேற்றை படைந்தார். அப் புத்திரப்பேறு ஒருவர் இருவரோடு அமையாமல், அசுவினி முதலிய நக்ஷத்திரங்களே-போல் இருபத்தேழுக்கு இலக்கமாகிவிட்டது.

செல்வத்தால் சிறந்த சீமான்கள் மனமகிழும்-வண்ணம் ஒரு புதல்வனையும் அடையாமல் வருந்தி நிற்கவும், நித்திய தரித்திரராகிய குசேலமுனிவர் இருபத்தேழு புத்திரர்களைப் பெற்றமை பெருமையே யன்றோ! ஆயினும், 'ஐந்துக்குமேல் அரசனும் ஆண்டி' என்னும் ஆன்றோர் வாக்கு அவலமாகாவண்ணம் அம் முனிவருக்கு வறுமைநோய் மிகுந்துவிட்டது.

குணக்குன்றாகிய குசேலமுனிவர், அந்த வறு-மையால் சற்றுங் குன்றாமல், செம்மனச் செல்வராய் விளங்கியிருந்தனர். அவர்,

பல்லெலாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானம் என்பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்.

என்பதை யுன்னி, எப்படிப்பட்டவரிடத்தும் ஏற்பது இழிவென்று இகழ்ந்து, தாம் வசிக்கும் காட்டகத்தில், கொள்வாரற்று உதிர்ந்து கிடக்கும் ஒருவகைப் புல்-அரிசியை அரிதாகத் தேடிச் சேர்த்துக் கொண்டுவரு-வார். 'பெற்றதே பாக்கியம்' என்று எண்ணும் அப்

புண்யவதி, தன் மணாளர் அரிதாகக் கொண்டுவரும் அந்த அரிசியை அன்புடன் ஏற்று, வெள்ளிதாகக் குற்றி, பாகஞ் செய்து, அதில் ஒரு பாகம் அதிதிக்கு இடுவாள். பின்பு, தன் மணாளரை உபசரித்து உண்பிப்பாள். அம் முனிவர் தாம் உண்டது கால் வயிறே யாயினும், நிறைமனப்பட்டு மகிழ்ந்து, அவ்வுணவைத் தமக்கு அருளிய எல்லாம்வல்ல இறைவனது அடிகளை மனோ வாக்கு காயங்களால் வணங்கி, ஒரு புறத்தில் யோகு செய்திருப்பார்.

முனிவர் வாழ்க்கை இவ்வாறாக, சுசீலை யென்னும் அப் பெண்மணி, மிகுந்த கஞ்சியை ஒரு மண்பாண்டத்திலிட்டு, அகப்பையால் முகந்து, குழந்தைகளுக்கு வார்க்கப் புகுவாள். அப்போது,

ஒருமகவுக்கு அளித்திடும்போது ஒருமகவு
   கைநீட்டும் முந்தி மேல்வீழ்ந்து
இருமகவும் கைநீட்டும் மும்மகவும்
   கைநீட்டும் என்செய்வாளால்
பொருமி ஒரு மகவழும் கண் பிசைந்தழும்
   மற்றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்தில் கிடந்தழும் மற்றொருமகவு
   எங்ஙனஞ் சகிப்பாள் பெரிதும் பாவம்.

அந்தோ என் வயிற்றெழுந்த பசியடங்கிற்
   றில்லை யென வழுமால் ஓர்சேய்
சிந்தாத கஞ்சி வார்க்கிலை யெனக்கு
   அன்றாய் எனப் பொய்செப்பும் ஓர்சேய்
முந்து ஆர்வத்து ஒருசேய் மிசையப் புகும்
   போதினில் ஒருசேய் முடுகி யீர்ப்ப
நந்தாமற்று அச் சேயும் எதிரீர்ப்பச்
   சிந்துதற்கு நயக்கும் ஓர் சேய்.

இவ்வாறு தம்முள் கலகப்படும் சிறுவரை, சுசீலை நோக்கி, ஏக்கங்கொண்டு, ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நிற்பாள். பின்பு, ஒருவாறு தேறி, மைந்தர்களைக் கரத்தா லணைத்து, முகந்துடைத்து, முத்தாடி, உச்சி மோந்து, ஒருவாறு தேற்றி அனுப்புவாள்.

அன்னையின் முத்தம் அன்னத்தினும் அன்பை உண்டாக்கு மாதலால், அச் சிறுவர் மனமகிழ்ந்து, வீதியில் சென்று, தம்மை யொத்த சிறுவரோடு சேர்ந்து விளையாடுவர். அக் காலத்து, அயல் வீட்டுச் சிறுவன், குசேலர் மக்களில் ஒருவனைப் பார்த்து, "உமது வீட்டில் இன்று பதார்த்தம் என்ன?" என்றான். அப் பையல், பதார்த்தம் என்றால் இன்னதென்று உணராமல், விரைந்து ஓடி, "அம்மா! அயல் வீட்டுச் சிறுவன், 'பதார்த்தம் என்ன?' என்று கேட்டான்; அதன் அர்த்தம் என்ன?" என்றான். அதைக் கேட்ட சுசீலை மனங் கசிந்து, "ஐயோ! பதார்த்தத்திற்குப் பதார்த்தம் சொன்னால், அதைச் செய்துகொடு என்று கேட்குமே, அதற்கு யாது செய்வோம்!" என்று எண்ணி, அப் பிள்ளையை நோக்கி, "குழந்தாய்! அதை யானும் அறியேன்" என்று சொல்லித் தேற்றி யனுப்புவாள்.

வேறுமனைச் சிறுன் அயின்ற பக்ஷணங்கண்டு
 ஓடிவந்து விழி நீர் வாரச்
சீறுதல் இலாத அன்னை முகம்பார்த்து
 இன்னான் இன்ன தின்றான் என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி
 யென உடுத்த உடைதொட் டீர்க்கும்
தேறுதல் இல் சிறுமகவை எடுத்து
 மார்பிடை அணைத்துச் சிந்தை நோவாள்.

குண்டலம் மோதிரம் கடகம் சுட்டி அயல்
மனையார் தம் குழவிக் கிட்டார்
புண்டரீகக் கண் அன்னாய் எனக்கு நீ
இடாதிருக்கும் பொறாமை என்னே
கண்டெடுத்து இப்போது இடெனக் கரைமதலைக்
இல்லாதான் கடன் தந்தானுக்கு [கு
எண் தபச் சொல் வார்த்தையென நாளைக்கு
நாளைக்கென்று இயம்பிச் சோர்வாள்.

மற்றுமுள்ள சிறுவரில் ஒவ்வொருவனும் வந்து, தாயைத் தழுவி, "அம்மா !

'எனக்குப் பருப்பும் வெல்லமும் பரிந்து இடு'
'எனக்குப் பாலும் வெண்ணெயும் பகிர்ந்து இடு'
'எனக்குச் சித்திரப்பட்டு சிறக்கக் கட்டு'

என்று கேட்டுத் தொந்தரவு செய்வான். அதற்கு அப் பெண்மணி, அமைவுடன் ஏற்ற பதில் சொல்லி, இன்புறுத்தி அனுப்புவாள். இந்தப் பிள்ளைகள் படும் பாட்டைக் கண்ணாரக் கண்டும், முனிவர் சற்றும் கவற்சி அடைவதில்லை. அவ்வாறு தன் மணாளர் பராமுகமாய் இருத்தலைக் கண்டு, சுசீலை அவரிடத்து வெறுப்பு அடைவதுமில்லை. 'இல்லானை இல்லாளும் வேண்டாள்' என்னும் பழமொழி அவளிடத்தில் பழுதுபட்டது. ஆயினும், தான் அரிதில் பெற்ற மக்களுக்கு உண்டாகும் பசிப்பிணியை எவ்வாறு ஒழிப்பது என்னும் எண்ணமட்டும் அவளது மனத்தை விட்டு ஒழிந்ததில்லை.

ஒருநாள், கற்பரசியாகிய சுசீலை தன் கணவன் அடிகளை வணங்கி, யாதோ ஒன்றை விண்ணப்பிக்க விரும்புவாள்போல் மயங்கி நின்றாள். குசேலர் அவளது அகக் குறிப்பை மு[illegible]டனர்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்

என்பது உண்மையே யன்றோ! பின்பு,

குசேலர்—பெண்ணே, சுசிலா! நீ இங்கு வேண்டி நிற்பது என்ன?

சுசீலை — என் ஆருயிர்த்தலைவ! அடியாள் மனத்தில் நெடுநாளாக ஒரு விருப்பம் உண்டு. அது நமது சிறுவரைப் பற்றியதே யாகும். தேவரீர் திருவுளங்கொண்டு அதனைக் கேட்டருளவேண்டும்.

குசேலர் — ஆஹா, அதென்ன? சிறுவரைப்பற்றிய செய்தியாது? அவர்களுக்கு என்ன நேர்ந்தது?

சுசீலை — நமது சிறுவர் பிறந்தநாள்தொட்டு இதுவரையில் வறுமையென்னும் நோயால் வருந்துகின்றனர். வறுமையினும் கொடியது வேறொன்றும் இல்லையே.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்றும்

"தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பரும் கலாம் பல விளைக்கும்
தரித்திரம் அவமானம் பொய் பேராசை
தரும் இதிற் கொடியதொன்று இலையே"

என்று தேவரீரைப் போன்ற ஆன்றோர் கூறியிருப்பது தாங்கள் உணர்ந்ததே யன்றோ.

குசேலர் — பெண் பேதாய்! நீ அறியாமல் வருந்துகின்றனை. அவரவர் செய்த நன்மை தீமைகளுக்கு

ஈடாக செல்வமும் வறுமையும் உண்டாகும். நன்மை செய்தோர் நலம்பெற்று இன்பமடைவர். தீமை செய்தோர் வறுமையுற்றுத் துன்பமடைவர். ஆதலால், நீ இதன்பொருட்டு வருந்துவது பேதைமையாகும்.

சுசீலை — தேவரீர் கூறுவது உண்மையே; ஆயினும், "அன்னமயம் பிராணமயம்" என்பர். 'பசிக்கு முன் பத்தும் பறக்கும்' என்பதும் தாம் அறியாததன்றே. நமது சிறுவருக்கு ஒரு நாளேனும் பசி தீர்ந்த பாடில்லையே! அதனை யொழிக்க முயல்வது நமது முதன்மையான கடமை யன்றோ?

குசேலர் — பெண்ணே! இவ்வுலகில் மனிதராகிய ஒவ்வொருவரும் என்றும் நன்மையே பெற நாடுவர். தம் நிலைமைக்கு மிகுந்துள்ள விஷயங்களை யெல்லாம் அடைய எண்ணியெண்ணி மனோராஜ்யம் செய்வர்; அவையெல்லாம் எப்படி எய்தும்; எய்தாது. அதனால், எல்லாம் தெய்வத் திருவருள் என்றெண்ணி, கிடைத்தது கொண்டு அமைந்திருத்தலே அறிவுடைமையாகும்.

சுசீலை — என் ஆருயிர்த்தலைவ! யாவுந் தெய்வத் திருவருளினாலே அமைகின்றன. ஆயினும், ஒருவன் ஒரு பொருளை அடையவிரும்பினால், அதன் பொருட்டுத் தக்கவாறு முயலவேண்டும். முயன்றால் அதனை முட்டின்றி முடிப்பது அக் கடவுளின் கடமையாகும். எல்லாவற்றையும் அவனருளே கூட்டிவைக்கு மென்றெண்ணி வாளா இருத்தல் எப்படி ஏற்றதாகும்.

> "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
> இன்மை புகுத்தி விடும்"

என்பர் பெரியோர். பால் சோற்றை வெள்ளியங் கலத்திலிட்டு முன்வைப்பின், அதனை எடுத்து அருந்த

முயற்சி வேண்டுமென்றோ. ஒருவன், உழுங்காலத்தே ஊர் திரிந்து, அறுக்குங் காலத்தே அரிவாள் எடுத்-துக்கொண்டு சென்றால் என்ன பெறுவான். ஆதலால், எதற்கும் முயற்சி வேண்டும்.

குசேலர் — ஆம், ஆம், முயற்சி வேண்டுவது உண்மையே. அந்த முயற்சியால் இந்த மைந்தர்க-ளைக் காக்கத் திரவியம் தேடிவருக என்றனை. ஐயோ இது என்னபேதைமை! காட்டில் திரியும் பலவகையான விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மற்றும் உயிர்க-ளுக்கும் தினமோ வாரமோ மாதமோ ஏதேனும் வருமென்னும் நிச்சய முண்டோ? தாய்தந்தையர் தேடிவைத்த சம்பத்துண்டோ? அவைகள் தமக்கு அன்றாடம் விளையளவாகக் கிடைக்கும் உணவை யுண்டு அமைந்திருக்கவில்லையோ. அவை, இன்று பசிதீர்ந்தோம்; நாளைக்கு என்ன செய்வோம் என்று கவிதலுண்டோ? அல்லது நமது உறவினர் செல்வத்-தாற் சிறந்து விளங்குகின்றனர். அங்கே சென்று சில நாள் தங்கி வருவோம் என்று ஒன்றை யொன்று பற்றிக்கொண்டு வாழ்தலுண்டோ. அல்லது ஒன்று ஒருபொருளைத் தேடுதலும்,மற்றொன்று அதையுண்டு, இடிப்புண்டு வாழ்தலும் உண்டோ? இவ்வாறெல்லாம் பிழைப்பது மானிடர்க்கேயன்றோ வழக்கமாயிருக்கின்-றது. இப்படிப்பட்ட மனிதரைவிட அப்படிப்பட்ட விலங்குமுதலிய உயிர்களே உயர்ந்தவையன்றோ?

சுசீலை — தேவரீர் கூறியவை உண்மையே. ஆயி-னும், நாம் அரிதிற்பெற்ற மக்கள் பசியால் படுந்துயர் சிறிதன்று. அதனால், அந் நோயைத் தீர்த்து அவர்-களைக் காப்பாற்ற முயலவேண்டும் என்பது ஒன்றையே அடியாள் விண்ணப்பிக்கின்றேன், மற்று யாது மில்லை.

குசேலர் — பெண்ணே! யான் எவ்வாறு இவர்களைக் காக்க வல்லேன். நம்மால் ஓர் உயிரைப் படைத்தலும், காத்தலும், அழித்தலும் இயலுமோ? இயலாது, இயலாது. இப்பிள்ளைகள்பொருட்டு நீ ஏன் வருந்தவேண்டும்?

கல்லினுள் சிறுதேரைக்கும்
கருப்பை அண்டத்து உயிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி அண்ணல்
ஒல்லும் நின் மைந்தர்க் காவாது
ஒழிவனோ ஒழியான் உண்மை
மெல்லியால் கொண்ட துன்பம்
விடுவிடு மறந்தும் எண்ணல்.

சுசீலை — தேவரீருரைத்த நீதிகள் யாவும் உண்மையே. இப் பிள்ளைகளை நாம் இளமையிற் பாது காத்தால், அவர்கள் நமது முதுமைப் பருவத்தில் நம்மை அன்னபானாதிகள் அளித்துக் காக்கக் கடமைப் பட்டிருப்பார்களன்றோ?

குசேலர் — பேதாய்! நீ அப்படியோ நினைத்தனை. இது அறியாமையாகும். இம் மைந்தர்கள் யாவர்? நீ யார்? இவை யனைத்தும் உரைக்கும் யான் யாவன்? பெரு நிதி படைத்தோம் என்றும், பிள்ளைகளை ஈன்றோமென்றும் எண்ணிக் கல்வி யறிவில்லாத கயவரே களிப்படைவர்.

மதலையைப் பெறுநாள் துன்பம்
வளர்த்திடு நாளும் துன்பம்
விதலைநோ யடையில் துன்பம்
வியன் பருவத்தும் துன்பம்

கதம் உறு காலர் வந்து
கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதம் உறல் எந்நாள் சேயால்
என்றைக்கும் துன்ப மாறல்.

சுசீலை — என் இன்னுயிர்த் தலைவ! "கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்" என்பர். அன்றி, கற்புடைய மடந்தையர்க்குக் காந்தனே கடவுள். அடியார் விருப்பை அன்புடன் முடிக்கும் ஆண்டவனேபோல், அடியாளது விருப்பத்தை முட்டின்றி முடித்தல் தேவரீரது கடமை யன்றோ?

குசேலர் — ஆம், அதற்கென்ன ஐயம். நீ இப்போது விரும்புவது யாது?

சுசீலை — முனிவர் பெரும! அடியாள் விருப்பம் நமது மக்களைப் பற்றியதே. தேவரீர் இளமைப் பருவத்தில் கண்ணபிரானோடு ஒருசாலை மாணாக்கராய் சாந்தீப முனிவரிடத்தே சகல கலைகளையும் கற்று உணர்ந்ததாக் கூறுகின்றனர். ஆதலின், தேவரீர் மனங்கொண்டு அப்பெருமானிடம் சென்று, சிறிது செல்வங் கொணர்ந்து, நமது செல்வரது தீராத வறுமையைத் தீர்த்தல் வேண்டும்.

குசேலர் — பேதாய்! இதுவோ நின் கருத்து. நன்று, நன்று! கற்பகத்தை யடைந்தோர் காஞ்சிரங்காயை விழைவதேபோல், கண்ணபிரானை யணுகிப் பொன்னையோ விரும்புவது? நின் புன்மதி இருந்தவாறு வெகு நன்று!

சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம் வந்துற்ற ஞான்-
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூகராவர் [றே
பறியணி செவியுளாரும் பயிறரு செவிட ராவர்
குறிபெறும்கண் ணுளாரும் குருடராய் முடிவர் அன்றே.

இத்தகைய பொருளின் நிலையை நீ அறியாயோ. அன்றியும், தரித்திரன் ஒருவன் செல்வரிடத்தில் சென்றால், அவனை அவர்கள் ஒரு பொருளாக மதியார்கள். அவன் மனம் வருந்துமாறு அவமானமும் செய்வார்கள். "இல்லானை எல்லாரும் எள்ளுவர்" என்பது உறுதியுரை யன்றோ? தாய்தந்தையர் மனைவிமக்களும் தரித்திரனை வெறுப்பார்களென்றால், மற்றையோர் வெறுப்பதை உரைக்கவும் வேண்டுமோ? தரித்திரனாகிய ஒருவன் செல்வனாகிய சிநேகனொருவனை காணுமாறு சென்றால், அந்தச் செல்வன், 'ஆஹா! இவன் ஏதோ ஒன்றைப் பெறக்கருதி நம்மிடம் இன்று வந்தான்போலும், என்று உன்னி, தரித்திரன் மனங்குன்றி வருந்துமாறு குறிப்புரைகள் பல கூறுவான். ஆதலால், செல்வரிடம் சென்று இவன் பெற்றது சிறுமையே யன்றி, வேறன்று. உலகத்தில் சாமானியர் செய்கையிது. எல்லாம் வல்ல இறைவனாகிய கண்ணபிரான் இவ்வாறு செய்வரென்று யான் கூறவில்லை. அப்படிப்பட்ட பொருளின் மீது இச்சை உனக்கு இருக்கலாமோ என்று மறுக்கின்றேன்.

சுசீலை — அடியாள் அந்தப் பொருளை இச்சிக்கவில்லை. சிறுவர் படும் துன்பத்தைக் காண மனம் பொறாமல் அதனை விரும்பினேன், வேறன்று.

குசேலர் — அது எவ்வாறாயினும் ஆகுக; இன்ப வீட்டினை விரும்பினும் எளிதில் ஈயவல்ல இறைவனை யணுகி இந்தப் பொருட் செல்வத்தையோ விரும்புவது? ஒருவாறு செல்லலா மெனினும், கையுறை ஏதேனும் வேண்டுமே! தெய்வ சந்நிதானத்திற்கும், ராஜ சமுகத்திற்கும், ஆசிரியர், பாலர், கர்ப்ப ஸ்த்ரீகள் முதலான வருள்ள இடத்திற்கும் வெறுங் கை-

மகாமேகாபாத்தியாய

யோடு ஏகலாகாது. கண்ணபிரான் நமக்குக் கடவுளா-கவும், காவல னாகவும், கடுநட்பின னாகவும் இருக்க, அவரிடத்தில் கையுறை யொன்று மின்றி எவ்வாறு செல்வது?

அது கேட்ட சுசீலை உள்ளத்தில் உவகைபூத்து, மனமகிழ்ந்து, தன் எண்ணம் பலித்ததென்று பூரித்து, அன்று முதல் உபவாச மிருந்து, அந்தணர் அரிதில் தேடிக் கொணரும் அரிசியில், தன் பாகத்திற்கானதை ஒருபால் சேர்த்து வைப்பாளாயினள். பின்னர், ஒரு நாள் அவள் அவ்வரிசியை நீரில் நனைத்து, ஊற வைத்து, பதமுற நன்றாய் வறுத்து, உலக்கைகொண்டு, வெள்ளிதாகக் குற்றி, கரிசு போக்கி, அவலாக்கி, அதனைக் குசேலருக்கு அறிக்கையிட்டாள். அது கேட்ட குசேலர் ஒருவாறு உளந்துணிந்து துவாரகைக்குச் செல்ல மனங்கொண்டனர்.

பின்னர் அக் கற்பரசி அந்த அவலை ஒரு கந்தையில் முடிந்து கொடுத்து வணங்கி நின்றனள். குசேல முனிவர் அந்த அவல்பொதியை அன்புடன் ஏற்று, அடக்கஞ் செய்து கொண்டு, கண்ணபிரான் அமர்ந்து அரசுபுரியும் துவாரகையை நோக்கிச் செல்வாராயினர்.

அருந்ததி, அநசூயை முதலிய கற்பரசிகளும் தொழுதேத்தும் தெய்வம் போல்பவளாகிய சுசீலை, அன்புறக்கொடுத்த அவற்பொதியினை ஏற்று, கண்ண-பிரானைக் காணச் செல்லுங் குசேலமுனிவர், தம் நாட்டை விட்டு, வழியில் நேர்ந்த வனங்களையும், குன்றுகளையும் அரிதிற் கடந்து, ஒரு பாலைவனத்து எல்லையை யணுகினர்.

அவர் அக் கானகத்தைக் கண்டு, உளம் நடுங்கி, "அந்தோ! இவ் வெப்பத்தினை ஊழித்தீக்கு உவமை

கூறினும் ஒவ்வாது. செல்வஞ் சிறந்தும் திணையளவும் ஈயாத புல்லரைப் பாடிப் பரிசுபெறுமல் திரும்பி வரும் புலவர் மனத்தை இதற்கு உவமை கூறுதலே அமைவுடையதாகும். இனி, என்ன செய்வது! இதனை எவ்வாறு கடந்து உய்வது!" என்று மயங்கி நின்று,

செறிதருதன் மனப்படியே செய்தல்
ஒருவற்கு இனிதாம்
அறிவுறுக்கும் குருமொழி கேட்டு
ஆக்கல் அதினும் சிறப்பாம்
முறிதரும் ஏதிலர்சொல் கேட்டு
உஞற்றல் முனிதுயர் மனையாள்
வறியவுரை கேட்டு உஞற்றல்
மண் இறல்நேர் கெடுதியுறும்.

என்றெண்ணி, ஒருவாறு தேறி, அப் பாலைவனத்தைக் கடந்து, அப்பால் நடக்கையில், கிளைவழி யொன்று குறுக்கிட்டது. முனிவர் அதைக்கண்டு மயங்கி ஒருவாறு துணிந்து, நேர் வழிகண்டு சென்று, மேலைக்கடற்கரையைச் சார்ந்தனர்.

அங்கு, துவாரகைக்குச் செல்லுவோர் சிலர் மரக்கலத்தில் ஏறுவதைக் கண்டு, "ஓஹோ! இதற்கு யாம் என்ன செய்வோம்? இக்கலம் உகைப்பவனுக்கு கூலி கொடுத்தல் வேண்டுமன்றே! நம்மிடத்தில் இம்மியும் இல்லையே, என்ன செய்வது!" என்றெண்ணி, அவனை யணுகி, இன்சொல் பல இயம்பினர். நல்லோர் தரிசனத்தால் நற்குண மடைந்த அக் கப்பலோட்டி, குசேலமுனிவரிடத்தில் பேரன்புடையனுகி, அவரைத் தனது மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டுபோய், துவாரகைப்பதியின் துறைமுகத்தில் இறக்கினுன்.

துவாரகைக்கரையி லிறங்கிய முனிவர், கண்ணனையே கண்டாற்போல் பெருமகிழ்வடைந்து, அரண்மனையை நோக்கிச் செல்லுவாராயினர். ஆண்டு, பற்பல சிறப்புக்களைக் கண்டு இறும்பூது எய்தினர். பின்னும், அப் பெரியோர்,

நெருக்கினுள் படலால், உடல் அரைபட்டு
நீளிடைக் கால் நிலத்து உறுமல், [தும்
வெருக்கொளச் சென்றும், கரங்கள் மேலெடுத்-
விடாதுகை யிடிப்புண்டும், வளைந்தும்,
பெருக்குறு வெயரில் மூழ்கியும், இரண்டாம்
பிறப்பினி நமக்கென உணர்ந்து,
திருக்கிளர் துவார பாலர் நிற்கின்ற
செவ்விய விடத்தினை யடைந்தான்.

அடைந்து, அங்கிருந்த துவாரபாலகரை நோக்கி, "மக்களுள் மிக்க மாதவமுடையீர்! யானோர் பிராமணன்; குசேலனென்னும் பெயரினன்; கண்ணபிரானோடு இளமையில் சாந்தீப முனிவரிடத்து ஒருசாலை மாணாக்கனாக வாசித்தவன்; ஆதலின், எனது வரவை தயைசெய்து அப் பெருமானுக்கு உணர்த்துதல் வேண்டும்" என்று வேண்டினர்.

அதுகேட்ட, துவாரபாலகர், வயிறும் புண்பட நகைத்து, "ஏ, பிராமண! நீயும் நின்கோலமும் இருந்தவாறு வெகு நன்று! நீ ராஜஸபையை அடையும் வண்ணம் நினைத்ததும் நன்று! மூப்பின் மிகுதியால் பகுத்துணர்வு அற்றனையோ! அந்தோ, நின் புன்மதி இருந்தவாறு என்னே!" என்று இழித்துக்கூறி, மற்றுஞ் சொல்லுவர்: "மணிமுடி தரித்த மன்னவர்கள் ஈண்டு பல நாட்களாகக் காத்திருந்தும், அரசரைக் காணும் அமயமறியாது வாடிநிற்கின்றனர் காணாய்;

நின் நிலையையும், எமது நிருபர் நிலையையும் ஒப்ப நோக்குமிடத்து, யானையும் எறும்பும் போலும்; மற்றும் அரசவை சேர விரும்புவார்க்கு;—

பொருள் நனி உளன் என்றுயாரும்
  புகலுமோர் வார்த்தை வேண்டும்
இருகையும் கடகம் வேண்டும்
  இலங்கு குண்டலங்கள் வேண்டும்
வருவிரல் ஆழி வேண்டும்
  மார்பிடை மதாணி வேண்டும்
உருவ முத்தாரம் வேண்டும்
  உயர்ந்த பட்டாடை வேண்டும்.

சிவிகை முன்னூர்தி வேண்டும்
  செழும்பொருள் செலவு வேண்டும்
குவி கை ஏவலரும் வேண்டும்
  கோலமார்ந்து இருக்கவேண்டும்
கவிகை தாங்குநரும் வேண்டும்
  கையுறை சிறப்ப வேண்டும்
அவிகையில் விளக்கம் வேண்டும்
  அரசவை குறுகுவார்க்கே.

இவ்வகைய சிறப்புக்களுள் ஒரு சிறிதுமற்ற நீ காவலனை எவ்வாறு காண்பது? பாலிய சிநேக மென்கின்றனை; அதனை அவர் உளத்திற் கொண்டிருப்பாராயின், ஒரு முறையேனும் உம்மைக்காண விரும்பியிராரோ? அந்தோ! வீணே வருந்தினை; மெய்யும் இளைத்தனை; பேரவா பிடர் பிடித்துத் தள்ள வந்தனையோ!'' என மனங் கன்றுமாறு பற்பல நிந்தை மொழிகள் கூறினர். பின்னும், "ஐயரே! இதோ கண்டீரோ? இவர் அயோத்தியின் அரசர்; இவர் கோசலநாட்டின் கோமான்; இவர் மகதநாட்டின் மகிபதி; இவர் கலிங்-

கநாட்டின் காவலர். இவரனைவோரும் நாட்கள் பல-வாகியும் நாடுதற்கின்றி வாட்ட முற்றிருக்கின்றனர். இவர்களை நோக்குமிடத்து நீ என்னுவாய்! ஆதலின், வந்தவாறே வழிக்கொண்டு நின்மனைக்கு ஏகுதலே சாலச்சிறப்பாகும்" என்றனர்.

இவையனைத்தும் செவிமடுத்த குசேலமுனிவர், "இது என்னே! சற்றும் எண்ணாது இதனில் தலை-யிட்டுக் கொண்டோம்,

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு

என்னும் மறைமொழியையும் மறந்தோமே. இனி, மன்னனைக் காணவென்றால், ஆரமாம், மதாணியாம், பட்டாம், ஊர்தியாம் இவையனைத்தும் நம் மூதாதை காலத்தும் கேட்டறியோமே" என எண்ணி ஏங்கி நிற்குமளவில், அங்கிருந்த அறிஞர் சிலர் அந்தக்கடைக் காவலரை நோக்கி, "பேதையீர் !

யாரென நினைத்தீர் இந்த இருந்தவத் தலைவன் தன்னைச்
சேருறு பொய்மை யில்லன் செறிந்தநோன் புழந்த நல்லன்
வாருறு மறைகள்வல்லன் மற்றெங்கும் செல்வான் அல்லன்
ஏருறும் இனிய சொல்லன் என்னவே யாம் உட்கோடும்

இத்தகைய நற்பேறு பெற்ற இம் முனி புங்கவரை எள்ளாதீர்: ஏத்துமின்; 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பதேபோல் மெய்ஞ்ஞானியராகிய இவ் வந்தணர் பெருமானுக்கு நம்மாலும், நம்மிறைவராலும் ஆகும் பயன் யாது. பெரியார் வரவு பெருமான் வரவை யொத்ததாகும். மற்றும்,

அருள்வாய்ந்த கடவுளும் அடியவரில் அடக்கம் என்றால் அவர்தம் பெருமையை என்னென்று இயம்ப-

லாம்!'' எனக் கூறிக் காவலரை வாயடக்கிய பின்னர், குசேல முனிவரை நோக்கி, "ஐம்புலன் அடக்கிய அந்தணர் பெரும! அடியேங்கள் அறியாது கூறிய பழிமொழியைப் பாராட்டாமல் பொறுத்தருள்க.

சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே

என்பது தாம் அறியாததன்றே'' எனப் பற்பல இத வார்த்தைகள் கூறி வணங்கி, "ஐய! சிறிது போழ்து பொறுத்தருள்வீரேல், விரைந்தோடி எமது வேந்தர்க்கு அறிவித்து வருகின்றோம்'' என்று, ஓடிச் சென்று அந்தப்புரத்தை யணுகினர்.

ஆண்டு, அவர்கள் கண்ணபிரானைக் காண்பதற்கின்றி, ஓடி உவளகத்தையடைந்து, அங்குக் கண்டனர். கண்டு, தம் சிரத்திற் குவித்த கரத்தினையுடையவராகி வணங்கிநிற்க, எல்லாம் வல்ல பெருமான் காவலரைக் கடைக்கணித்தருளினர். அப்பொழுது, காவலர் நாக் குழற, உடல் நடுங்க,

மாமறைத்தலைவாபோற்றி மதிக்குலவிளக்கேபோற்றி
காமரிந்திரன்முன்னோர் காண்பதற்கரியாய்போற்றி
தாமரைக்கண்ணபோற்றி தரியலரேறேபோற்றி
தோமறுசெல்வம்வாய்ந்த துவாரகைக்கிறைவாபோற்றி

என்று தொழுது, எம் இறைவனே!

ஆதிநாளையில் நின்னோடு அருங்கலை கற்றுளானும்
போதவும் சிறந்த நட்புப் பூண்டுகொண் டவனும் கந்தை
மேதகக் கொண்டீரான் மெய்ம் மறையவர் குலத்தான்
கோதறு குணத்தின் மிக்கான் குசேலனென்றியம்பினன்பேர்

எனக் கூறக்கேட்ட கண்ணபிரான், கனிந்த மனத்தோடு விரைந்து இருக்கையை விட்டெழுந்து,

தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று
நேய மிக்குடையோனாகி நெஞ்சினுள் உவகை பூப்பப்
போயழைத் திடுமி னின்னே போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே எனவிரை பொருளிற் சொற்றான்.

அதுகேட்ட காவலர் விரைந்தோடி, குசேலமுனிவர் அடிகளில் தம் முடிபட வணங்கி, "அந்தணர் பெரும! தேவரீர் விரைந்து வாராமல் காலந் தாழ்ப்பீராயின், வேந்தரே இங்கு வந்துவிடுவர். பலவாறு கூறிப் பயன் யாது" எனலும், குசேலர் உள்ளத்தில் உவகை பொங்கக் காவலரைப் பின்பற்றிச் சென்று,

எண்ணனைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிடம் உறக்கொண்டானை
மண்ணனைத் தும்புரக்கும் வாசுதேவனை மணக்கும்
கண்ணனை துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற்கண்டான்.

காண்டலும், கண்ணன் மடை திறந்த வெள்ளமே போல் எழுந்து, மறையவர் மலரடியில் தன் முடிபட வணங்கி வழுத்தி, "தேவரீர் அடியேனது வேண்டு-கோளையும் வேண்டாமல் ஈண்டு அடைந்தது, யான் இயற்றிய தவமோ? அன்றி, இந்தத் துவாரகை செய்த அருந்தவமோ? யாதோ அறியேன்! என் நற்றவப் பயன் இன்றே பலித்தது. அடியேனது இல்லமும் தூய்மை யடைந்தது. இனி அடியேன் பெறவேண்டிய பயன் என்னுளது?" என்று பல-வாறு புகழ்ந்து உரைத்தனன்.

பின்னர், கண்ணபிரான் குசேலமுனிவரை மஞ்-சன நீராட்டி, ஈரம் புலர்த்தி, பட்டாடை சாத்தி, நறுமணச் சாந்து பூசி, அறு சுவையோடு நால்வகை யுண்டியும் அமர்ந்து இட்டனன். பின்னும், அம் முனி-வர்க்குத் தாம்பூலம் அளித்து அமளியில் அமரச் செய்-

தனன். குசேலர் நெடுந்தூரம் நடந்த களைப்பினாலும், வயிறார உண்ட இளைப்பினாலும் மெய்மறந்து படுத்தனர். அப்போது, கண்ணன் அவர் அருகில் உட்கார்ந்து இத வசனங் கூறி,

வழிநடந் திளைத்தவே இம் மலரடி யிரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினான் கமலக் கண்ணன்
பழியில் பல் உபசாரங்கள் பண்ணவுந் தெரியா னாகி
ஒழிவறு தவக் குசேலன் ஒன்றும் பேசாதிருந்தான்.

ஆயினும், குசேலமுனிவர் தம் மனத்தினுள்ளே, அக் கண்ணபிரானது அவயவங்களைப பாதாதி கேசமாகத் தியானித்து, யோகுசெய் திருந்தனர். அக் காலத்தே, கண்ணன், முனிவரை நோக்கி, அவரது மனைவி மைந்தர் முதலாயினோரைக் குறித்து, "அந்தணர் பெரும! உமது மனைவியார் நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவரோ? உமது உடலினைப் போற்றி வளர்க்கும் தன்மையரோ? உமது வருவாய்க்குத் தக்கவாறு செலவிடும் செய்கையரோ? உமது மக்கள் மாண்புடைய குணத்தினரோ? நீவிர் அவர்கட்கு உபநயநம் முதலிய சடங்குகளைக் குறைவின்றி நிறைவேற்றினீரோ?" என்பது முதலிய பற்பல வினாக்கள் கேட்க, குசேலர் ஒன்றும் உரைத்தற் கியலாது, வாளா இருந்தார். மற்றும், "என்னே! மவுனமுற் றிருக்கின்றீர். 'தோழனோடும் ஏழைமை பேசேல்' என்பதை யுன்னி, கிருக சித்திரங்களை வெளியிடுதல் நன்றன்று என இருக்கின்றீரோ? ஆனால், அது நிற்க, நாம் சாந்தீப முனிவரைச் சார்ந்து கல்வி பயின்ற காலத்தே, நிகழ்ந்தன யாவும் நினைவிருக்கின்றனவோ?" என்றான் கண்ணன். அதற்கெல்லாம் குசேலர் தக்கவாறு விடை கூறினர். இவை யனைத்தும் முடிந்த பின்னர், கண்ணன்.

"பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை எனக்கு என் கொண்டு வந்தனை ?

அதனை இன்னே எனக்குத் தருக, என்வாய் ஊறு-கின்றது" என்று தன் மலர்க்கை நீட்டி வேண்டினன்.

அப்போது, குசேல முனிவர் ஒன்றுங்கூற அறி-யாராய், "என்னே, இம் மன்னர் மன்னனுக்கு யாம் கொடுப்பது யாது! இவ்வவலைக் கொடுத்தல் பாலுண்-பானுக்குப் புளிங்காடி கொடுத்து உண்க வென்று உபசரித்தலாகுமே" என்றுன்னி மவுனமுற்றிருந்தனர்.

அதுகண்ட மாயன், குசேலமுனிவரது கந்தை-யை எடுத்துத் தேடி, அதன் முன்றுனையில் முடியிட்-டிருந்த சிறு பொதியைக் கண்டு, அதனை அவிழ்த்துப் பார்த்தலும், அது அவலாக இருந்தமை கண்டான். கண்டு, மகிழ்ச்சிகொண்டு, "ஆஹா ! நல்லதோர் சிற்-றுணவு நமக்குக் கிடைத்தது" என்று கூறி, அதில் ஒருபிடி எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். பின்பு அதனை இரு பக்கங்களிலும் அடக்கி, உமிழ் நீரில் பதமுற நனைத்த பின், சிறிது சிறிதாக மென்று, பல முறை தலையை அசைத்து அசைத்து,

செறிதரு சுவைத்தீ தென்றும் தேவர்க்கு மரியதாகும்
அறிதரு விருப்பின் இல்லின் அமைத்ததே பழைதும் அன்று
குறிதரு விலைப்பாற் சென்று கோடலிவ் வளத்ததோ என்று
உறியளை வாரியுண்டோன் ஒருபிடி அவல் தின்றனே.

மாயவனது மாயம் அனைத்தையும் கண்ட குசேலர் ஒன்றும் உரையாமல் அமைந்திருந்தனர். பின்னர், இரண்டொரு பகல் அங்கிருந்து, மூன்றுநாள் குசேலர் தமது அகத்திற்குச் செல்லுமாறு கண்ணனிடத்து விடை பெற்றனர். மாதவனும் வாயிற்கடைவரையில் வந்து மாதவரை வழிவிட்டான்.

வந்ததேபோல் வறிய கோலத்தோடு செல்லுங் குசேல முனிவரைக் கண்ட மாதர் பலர், கண்ணனது கள்ள வுள்ளத்தைக் குறித்துப் பலவாறு பகர்வாராயி-னர். "அந்தோ! இப்பிராமணர் யாது கருதி வந்தன-ரோ? இப்போது வறிதே செல்கின்றார்; இந்த மாயனை நம்பியும் வந்தாரே! வருதலும் இவன் அவர் காலில் விழுந்தான், கட்டி யணைத்தான், ஆடினான், பாடினான், புகழ்ந்தான், போற்றினான், முடிவில் ஒன்று மின்றி ஊருக்கனுப்பிவிட்டான். 'கடித்த பாக்குக் கொடாத சிற்றப்பன் கடைத்தெருவரையில் வழிவிட்டான்' என்னும் உலக வழக்கேபோல் கடைவாயில் வரையி-லும் வந்து வழிகாட்டினான். என்னே! இவன் வஞ்ச நெஞ்சம் இருந்தவாறு" எனச் சில மாதர் தூற்றுவா-ராயினர். அவர்களில் ஒருத்தி, "நாம் வீணே நமது கண்ணபிரானைத் தூற்றலாகாது. அவன் எல்லாம் செய்ய வல்லவன். அணுவை மலையாகவும், மலையை அணுவாகவும் மாற்ற வல்ல ஆற்ற லுள்ளவன். நல்-லோர் எதையும் சொல்லாமற் செய்வர்.

சொல்லாமலே பெரியர் சொல்லிச் செய்வார் சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே — நல்ல
குலாமாலை வேற் கண்ணாய் கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

என்னும் முதுமொழியை நீங்கள் அறியீரோ" என்-றாள். அது கேட்ட மற்றொருத்தி, "ஆம், ஆம், எத-னையும் தீர யோசியாமல் உரைத்தல் கூடாது; தன் உள்ளத்தில் நினைத்த மாத்திரத்தால் இந்திர பதவியை-யும் எளிதில் ஈயவல்ல நமது கண்ணபிரான் இந்தப் பிராமணருக்குச் சிறிது பொருள் கொடுப்பதையும் சிரமமாக எண்ணுமோ! வந்தவருக்குக் கையில்

கொடுத் தனுப்புவது நல்ல வழக்க மன்று. அதனால், நமது கண்ணபிரான் அவருக்கு வியப்பு உண்டாகும்படி வீட்டிற்கு வேண்டியவற்றைப் பின்பு அனுப்ப எண்ணி யிருக்கலாம்; அல்லது இப்போதே அமைத்துவிட்டும் இருக்கலாம். அவனது திருவிளையாடலை அறியவல்லார் யாவர்” என்றாள்.

இது இவ்வாறாக, கண்ணன்பால் விடைகொண்ட முனிவர், வீதிகள் பலவுங் கடந்து, துறைமுகத்தை யணுகி, மரக்கல மூர்ந்து, தம் நகர்ப்புறம் செல்லுங் காலத்து, கந்தை வஸ்திரம் கனக வஸ்திர மாயிற்று; துளபமாலை துகளில்லாத நவமணி மாலை யாயிற்று; உடல் பூரித்தது.

அதுகண்ட குசேலர் தம் உடலை நோக்கித் தாமே ஐயமுற்று, அதனைப் பலமுறை பார்த்துப் பார்த்து வியப்படைந்து செல்வாராயினர். ஆண்டுக் கண்ணன் ஏவலினால் ஏவலர் பலர் தொடர்ந்து வந்து குசேலரது குற்றேவலுக்கு எதிர்நோக்கிச் சூழ்ந்தனர். அப்போது குசேலர் கண்ணபிரானது நட்பின் திறத்தை யுன்னி,

ஆயின்மறை முதற்கலைகள் அனைத்துமுணர்ந் தறம்மறம்பாத்
தேயினிது நன்றிதுதீ தென்றுணர்ந்தும் அவர் நட்டை
வீயினுந்தான் மறப்பர்களோ மேதையோர் மறப்பரேல்
நாயினுங்கீழ்ப் பட்டவர்கள் அவர்காண் இந் நானிலத்தே.

பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளான் ஆயிடினும்
என்னுள்ளான் ஆவனவன் இருந்தவர்தம் நட்பிலனேல்
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லான் ஆயிடினும்
என்னில்லான் ஆவனவன் இருந்தவர்த நட்புளனேல்.

சமயம்வரின் இடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வார்
இமையவர்தம் உலகுறவும் இருளுலகம் பகையுமாய்
அமையவறி வுறுத்துவார் அந்தோநூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கு மரிதரிது.